


28.07.2024

தலைப்புச் செய்திகள்

1. சுதந்திர தினத்தன்று ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் வகையில் மக்கள் அனைவரும் வீடு தோறும் மூவர்ண தேசிய கொடியை ஏற்றுமாறு பிரதமர் திரு.நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இந்திய - ஜப்பான் இடையேயான இருதரப்பு உறவுகள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், ஜப்பான் வெளியுறவு அமைச்சருடன், டோக்கியோவில் இன்று விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

3. மேட்டூர் அணையிலிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், உத்தரவிட்டுள்ளார்.

4. தமிழ்நாட்டில் இதுவரை 5 ஆயிரத்து 577 கோடி ரூபாய் மதிப்புடைய கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. பாரீஸ் ஒலிம்பிக் பேட்மிட்டன் போட்டியின் 2-வது சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

மன் கி பாத்

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை ஒட்டி வரும் ஆகஸ்ட் 15-ம் தேதி மக்கள் அனைவரும் வீடு தோறும் மூவர்ண கொடியை ஏற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 112-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், இல்லந்தோறும் மூவர்ண கொடி ஏற்றுவோம் இயக்கத்தில் அனைவரும் இணைந்து மூவர்ண கொடியுடன் செல்ஃபி எடுத்து

ாயச பாயச வசையபெய.உழஅ என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யுமாறு பதிவேற்றுமாறு அறிவுறுத்தினார்

மேலும், சுதந்திர தினத்தன்று பிரதமர் உரையில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் குறித்த ஆலோசனைகளை பொதுமக்கள் அலபழள அல்லது நமோ செயலியில் வழங்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார்.

.. வாய்ஸ் ..

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களில் அசாம் மாநிலத்தின் சாரிடியோ மொய்தம் இடம் பெற்றுள்ளதாக கூறிய பிரதமர், இந்தியாவிலிருந்து உலக பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் 43-வது சின்னமாக இந்த சாரிடியோ மொய்தம் அமைந்துள்ளதாக கூறினார்

அஹோம் இன மக்கள் தங்கள் மூதாதையர்களின் நினைவுப் பொருட்களை பாதுகாத்து முன்னோர்களுக்கு மதிப்பளிக்கும் இடமாக இது திகழ்கிறது என்றார்.

நாட்டின் கலாச்சாரத்தில் பெருமை கொள்வதன் மூலம் வளர்ச்சியை எட்டமுடியும் என்று குறிப்பிட்ட பிரதமர் இதற்கென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக கூறினார்.

நாட்டின் கலைகளை குறிக்கும் பாரி திட்டம் குறித்து பேசிய பிரதமர், அனைத்து துறை கலைஞர்களுக்கும் உரிய தளமாக இந்த பாரி திட்டம் திகழ்கிறது என்றும், சாலையோர சுவர்கள், பாலங்களில் வரையப்படும் ஓவியங்கள் பொது இடங்களின் அழகை மேலும் மெருகூட்டுவதாக கூறினார்.

தேசிய கைத்தறி தினம் வரும் 7-ம் தேதி கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், நாட்டின் பல்வேறு பகுதிகளின் கைத்தறியை பிரபலப்படுத்தும் வகையில், ஒடிசாவின் சம்பல்புரி, மத்திய பிரதேசத்தின் மகேஸ்வரி புடவைகள், ஹிமாச்சலத்தின் கம்பளி ஆடைகள் உள்ளிட்டவைகள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் ஊக்குவிக்கப்படுவதாக கூறினார்.

உள்ளூர் பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் எனது தயாரிப்பு ! எனது பெருமை ! என்ற ஹேஷ் டாக்குடன் இப்பொருட்கள் குறித்து சமூக ஊடகங்களில் மக்கள் பதிவேற்றவும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

காதி பொருட்கள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாக கூறிய பிரதமர், காதி கிராம தொழில்துறையின் மூலம் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடைபெற்று உள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிகளில் 4 தங்கம் 1 வெள்ளி பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் 5 இடங்களுக்குள் முன்னேறி உள்ளதை பாராட்டிய பிரதமர், இம்மாணவர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார்.

போதை பொருள் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்க, மத்திய அரசு மானஸ் என்ற சிறப்பு மையத்தை ஏற்படுத்தி உள்ளதாக கூறிய பிரதமர், இதற்கான இலவச தொலைபேசி எண் மற்றும் இணையதள வசதி அண்மையில் தொடங்கப்பட்டு உள்ளதாகவும், இதன்மூலம் மறுவாழ்வு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் தகவல்களை பெறமுடியும் என்றார்.

இதில் பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் ரகசியமாக வைக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

சர்வதேச புலிகள் தினம் நாளை கொண்டாடப் படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், புலிகளின் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

உலகம் முழுவதும் உள்ள புலிகளில் 70 சதவிகிதம் இந்தியாவில் இருப்பதாக தெரிவித்த பிரதமர் நாட்டின் வனப்பகுதி அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் ஒரே நாளில் 2 லட்சத்திற்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்திய விளையாட்டு வீரர்களை சமூக ஊடகங்கள் வாயிலாக ஊக்கப்படுத்துமாறு பொதுமக்களை பிரதமர் கேட்டுக்கொண்டார்.

□□□□□□□□

ஜெய்சங்கர்

குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு டோக்கியோவில் நாளை நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக இன்று ஜப்பான் சென்றடைந்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், எடோகாவாவில் தேசப்பிதா மகாத்மாகாந்தியடிகளின் சிலையை திறந்துவைத்தார்.

தொடர்ந்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனுடன் பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

□□□□□□□□

முதலமைச்சர்

மேட்டூர் அணையிலிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அணையிலிருந்து தண்ணீர் திறப்பது குறித்து சென்னை தலைமை செயலகத்தில் டெல்டா மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்ட அவர், நீர் வரத்தை பொறுத்து இது படிப்படியாக உயர்த்தப்படும் என்று கூறியுள்ளார்.

□□□□□□□□□

அணைகள்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக கர்நாடக, கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து இன்று 1 லட்சத்து 65 ஆயிரத்து 867 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதனையடுத்து ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 1 லட்சத்து 55 ஆயிரம் கனஅடியாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து பகல் 12 மணி நிலவரப்படி வினாடிக்கு 1 லட்சத்து 47 ஆயிரத்து 896 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 109.2 அடியாக உள்ளது.

□□□□□□□□□

உதகை வாய்ஸ்

உதகை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த காற்றுடன் பெய்துவரும் தொடர்மழை காரணமாக 30-க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் விழுந்ததையடுத்து சீரமைப்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

குற்றால அருவிகளில் இன்று திடீர் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□□

தமிழக அரசு

தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளில் ஆயிரத்து 355 திருக்கோவில்களில், குடமுழுக்கு விழா நடத்தி உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு இன்று வெளயிட்டுள்ள செய்தியில், 8 ஆயிரத்து 436 திருக்கோவில்களில், 3 ஆயிரத்து 776 கோடி ரூபாய் மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

ஆக்கிரமிக்கப்பட்ட 5 ஆயிரத்து 577 கோடி ரூபாய் மதிப்புடைய கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பழனி - இடுபன் மலை இடையே 80 கோடியே 50 லட்ச ரூபாய் மதிப்பில் கம்பிவட ஊர்தி அமைக்கப்படும் என்றும், அனுவாவி, திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் ஆகிய திருக்கோவில்களில் இத்தகைய ஊர்திகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

கே.என்.நேரு

தமிழக அரசு பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்ட நடப்பாண்டு 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

சேலத்தில் பள்ளி அரசு பள்ளி மாணாக்கருக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கி பேசியஅவர், ஏழை எளிய மாணாக்கர் பயன்பெறும் வகையில், உயர் கல்வியில் ஏழரை சதவிகித உள்ஒதுக்கீடு வழங்கப்படுவதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

கலந்தாய்வு

தமிழகத்தில் பொறியியல் படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு நாளை தொடங்கி வரும் செப்டம்பர் 3-ம் தேதிவரை 3 சுற்றுகளாக நடைபெறவுள்ளது.

கடந்த 22-ம் தேதி தொடங்கி நேற்றுவரை நடைபெற்ற சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வில் 92 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

□□□□□□□□

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் பேட்மிட்டன் போட்டியின் 2-வது சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் சிந்து - மாலத்தீவின் அப்துல் ரஸாக்கை 21 - 9, 21 - 6 என்ற செட்களில் வென்றார்

துடுப்பு படகு போட்டியில் இந்திய வீரர் பன்வர் பன்ராஜ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பேட்மிட்டன் பிரிவில் ர்.ஞ. பிரணாய் இன்று களம் காணுகின்றார்.

வில்வித்தை, நீச்சல், டேபிள் டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், இந்திய வீரர்கள் இன்று போட்டியிடுகின்றனர்.

□□□□□□□□□

கிரிக்கெட்

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி பல்லேகலேயில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

□□□□□□□□□

மகளிர் கிரிக்கெட்

தம்புலாவில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

□□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.